TAMIL

அன்பார்ந்த பெற்றோர்/பாதுகாவலர் அவர்களுக்கு:

நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் எங்களுடைய பரந்த சமூகத்தின் உறுப்பினர்கள் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம், இந்தச் சமூகத்தில் இப்போது நூற்றுக்கும் அதிகமான வெவ்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. Prince William County பப்ளிக் ஸ்கூல்ஸ், ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு *உலகத் தரம் வாய்ந்த கல்வியை* வழங்க உறுதிகொண்டுள்ளது. இந்தச் செயல்முறையில் குடும்பத்தினரின் பங்களிப்பு முக்கியமானதாகும், ஒவ்வொரு பெற்றோரும், பாதுகாவலரும் தங்களுடைய குழந்தையின் கல்வியை முழுமையாக புரிந்துகொள்ளவும், ஈடுபாட்டுடன் இருக்க உதவியாக சில அடிப்படைத் தகவலை வழங்கும்படி கேட்கிறோம்.

பள்ளிக்குத் தேவையான அனைத்து விஷயங்களும் ஆங்கிலத்தில் வழங்கப்படும்; எனினும், முக்கிய ஆவணங்கள் மற்றும் தகவலை எங்கள் பகுதிகளில் பொதுவாக கருதப்படும் பிற மொழிகளில் தொடர்ந்து மொழிபெயர்ப்பு செய்கிறோம்.

Prince William County பப்ளிக் ஸ்கூல்ஸ் இணையதளம்–pwcs.edu–மற்றும் தனிப்பட்ட பள்ளி தளங்கள் ஆகிய இரண்டிலும் முக்கிய புதுப்பிப்பு மற்றும் தொடர்ந்து புதுப்பிக்கப்படும் தகவல் மூலம் பல மொழிகளில் உள்ள பேச்சாளர்கள் பயனடைவார்கள். முன்னணி Google மொழிபெயர்ப்பு கருவியில் அனைத்து மொழிகளிலும் உள்ளது, 50 மொழிகளுக்கும் அதிகமான மொழிகளில் வரையறுக்கப்பட்ட மொழிபெயர்ப்பை வழங்குகிறது. கணினிவழி மொழிபெயர்ப்புகள் முழுமையான பொருளை வழங்காது, ஆனாலும் பள்ளி குறித்தத் தகவலை அறிய பொருத்தமான இணைப்புகளை வழங்குகிறது. உங்கள் வீட்டில் கணினியின் அணுகல் இல்லையெனில், எந்தப் பொது நூலகத்திலும் உள்ள ஒரு கணினியைப் பயன்படுத்தலாம். மாணவர் மற்றும் பெற்றோரின் உரிமைகள், பொறுப்புகள், எதிர்பார்ப்புகள் மற்றும் பள்ளி தொடர்பான பிற சிக்கல்கள் மற்றும் மாணவர் பெறக்கூடிய பயன்கள் மற்றும் சேவைகள் போன்ற தேவையான தகவலை உள்ளடக்கும் ஆவணங்களைப் பிற மொழி பேச்சாளர்கள் புரிந்துகொள்ள உதவியாக மொழிபெயர்ப்பு நிபுணர்களின் அணுகலைப் பள்ளி பிரிவு வழங்குகிறது என்பது இதில் கவனிக்கத்தக்கது. இந்த விஷயங்களில் ஒவ்வொருவரின் கருத்தும் தெரிவிக்கப்பட்டதையும், புரிந்துகொண்டதையும் உறுதிப்படுத்தும் வகையில் பெற்றோருடனான கலந்துரையாடல்களில் உரைபெயர்ப்பாளர்கள் உதவலாம். இந்தச் சேவைகள் எவ்வித கட்டணமும் இன்றி குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

DR. STEVEN L. WALTS
*Superintendent of Schools*

P.O. BOX 389, MANASSAS, VA 20108 • WWW.PWCS.EDU

**உங்களுக்குக் குறிப்பிட்ட உதவி தேவைப்படும்போது இந்த முறைகளில் எதையாவது பயன்படுத்தலாம்.**

- ஆன்லைன்–translations.pwcs.edu என்ற ஆன்லைன் தளத்திற்குச் செல்லவும்.
- நேரடியாக–உங்கள் குழந்தையின் பள்ளிக்குச் செல்லலாம். உங்கள் மொழியைப் பேசக்கூடிய ஒருவர் இல்லாத பட்சத்தில், அதற்கு வருந்துகிறோம். எனினும், பணியாளர் ஒருவர் போஸ்டரின் வாயிலாக உங்களுக்கு உதவுவார்.

எல்லா சூழல்களிலும், பின்வரும் தகவலை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்:

- ○ உங்கள் பெயர் மற்றும் உங்கள் குழந்தையின் பெயர்;
- ○ உங்கள் குழந்தையின் பள்ளி, தரநிலை மற்றும் ஆசிரியரின் பெயர்;
- ○ நீங்கள் பேச விரும்பும் நபர் (பெயர் அல்லது பணி) மற்றும் கலந்துரையாடலின் தலைப்பு; மேலும்
- ○ தொலைபேசி எண் மற்றும் நீங்கள் சரியாக வந்தடையும் நேரம்.

பள்ளியிலிருந்து சந்திப்பு குறித்த ஒரு செய்தியை உங்கள் குழந்தை வீட்டிற்கு கொண்டுவந்தால்; அல்லது ஆசிரியர் அல்லது பிற பள்ளி அலுவலருடன் நீங்கள் கலந்துரையாட விரும்பினால், இந்த முக்கியமான உரையாடல்களுக்கு உதவியாக உரைபெயர்ப்பாளரை கேட்க மேலேயுள்ள முறைகளைப் பயன்படுத்தவும். உங்களை விரைவில் மீண்டும் யாராவது தொடர்புகொள்வார்கள்.

உங்களுடைய ஈடுபாட்டின் மூலம் உங்கள் குழந்தையின் கல்வியில் ஒரு சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தலாம், மேலும் இந்தச் சேவைகளை உங்களுக்கு வழங்கி உதவுவதற்கு ஆர்வமாக உள்ளோம். உங்கள் குழந்தைக்கும் உங்களுக்கும் Prince William County பப்ளிக் ஸ்கூல்ஸ் கடமைப்பட்டுள்ளது என்பதை இந்தக் கடிதம் தெளிவாக வெளிப்படுத்துகிறது என நம்புகிறோம். ஒவ்வொரு மாணவரும் ஒரு உலகத் தரம் வாய்ந்த கல்வியைப் பெறுவதற்கான எங்கள் விருப்பத்தை அனைவரிடமும் தெரிவிப்பீர்கள் என நம்புகிறேன்.

உண்மையுள்ள,

Steven Walts

Dr. Steven Walts
பள்ளிகளின் கண்காணிப்பாளர்

*pwcs.edu -ஐப் பார்வையிடும்போது, இந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ள தகவலைக் கொண்டுள்ள பக்கங்களைக் கண்டறிய வண்ணமயமான குளோபைப் பார்க்கவும்.

